
<u>சிறுகதை</u>



எங்கிருந்து பார்த்தாலும் நெலா

சரஸ்வதி விலாஸ், போஜன சாலை, “ஜி.இ.சி. ரேடியோவுல இருந்து தர்மாம்பாள், சேதி சொல்லி முடிக்கிற வரைக்கும், கைலாசபதி செட்டியார், நவரத்தினம் ஸ்டோர் கட அஞ்சடியில போட்டு வச்சிருக்குற வாங்குலர்ந்து எழுந்துருக்கவே மாட்டார் செண்றி போர்டுல வேல பாக்குற நாடாரு தாத்தா. ஊரு செய்தியைக் கேக்கும் போது அப்படியே லயிச்சுப் போயி ஒக்காந்திருப்பாரு. பக்கத்துல இருக்குற பெரிய பூமரத்துக்குக் கீழே முங்கக் குச்சிங்கலச் சேத்துக் கட்டுன தொடப்பம். அத அப்படியே ஓரத்துல சாத்தி வச்சிபுட்டு தெனம் இந்த நேரத்துக்கு ஆல் இந்தியா ரேடியோவுல செய்தியைக் கேக்கநவரத்தினம் ஸ்டோர் புக்கு கட வாங்குமேல ஒக்கார்ந்துக்கிறது நாடாருத் தாத்தாவோட வழக்கம். டவுன்ல ரெண்டு பக்கமும் மரத்துலர்ந்து கொட்டிக் கிடக்குற பூ, இலை, செத்த, காயிதம் எல்லாத்தயும் கூட்டிப் பெருக்கி முட்டுப் போட்டு வக்குரதுதான் நாடாரு தாத்தாவோட அன்னாட வேல. என்னயப் பாத்துட்டார்னா நாடாரு தாத்தா விடமாட்டார். தசாம்சக் கணக்கு போட்டு தெணர அடிப்பாரு.
“இந்தா, இங்க வா. ஒன்னுங் கீழ் பதினார என்னான்னு சொல்றது?”
“வீசம்னு சொல்லணும் தாத்தா”.
“அப்படிப் போடுரா சிங்கம்”. எங்க அப்பா பேரச் சொல்லி, அவரூட்டுப் புள்ளயில்ல, “புலிடா, நீ” ம்பாரு. “இந்தா, இருவது காசு பலகாரம் இல்லீன்னா, ஐஸ்கிரீம் ரொட்டி ஏதாச்சும் வாங்கிச் சாப்புட்டுக்க.” அப்படி நாடாரு தாத்தா சொல்லிக் காசு கொடுக்கும் போது அவரோட வெத்தல போட்ட வாய் நரச்ச மீசயெல்லாம் ஒரு வெதமா துடிக்கும். நாடாரு தாத்தா கணக்குப் போட்டுப் பதில் சொல்லி காசு கொடுத்தப்பவெல்லாம் இப்படி வாயும் மீசயும் துடிக்கிறத நான் பாப்பேன். எங்கப்பள்ளிக்கோடத்து, பத்திரிக, பொஸ்தகமெடுக்க, பள்ளிக்கோடத்து சட்டாம் புள்ளயாயிருந்த என்னயத்தான் நவரத்தினம் புக்ஸ்டோருக்கு டோமினிக் பெரிய சாரு அனுப்பி வப்பாரு. ஆறாம் வகுப்புல, எனக்குப் பக்கத்து சீட்ல ஒக்கார்ந்திருக்குற பூ.இராமன் கிட்ட சைக்கிள வாங்கிக் கிட்டுப் போய்தான், அதெல்லாத்தயும் எடுத்துக்கிட்டு வருவேன்.

அப்பவெல்லாம், நவரத்தினம் புக்ஸ்டோர் வாங்குமேல ஒக்காந்து எதிர்ல சரஸ்வதி போஜன சால ரேடியோவுலர்ந்து வர்ற ஆல் இந்தியா செய்திய நாடாரு தாத்தா கேட்டு முடிக்கிறதுக்கும் நான் அங்க போய் நிக்கிறதுக்கும் சரியா இருக்கும். செய்தி கேட்ட உற்சாகத்தோடயே நாடாரு தாத்தா கணிதம், சரித்திரம், பூகோளத்திலிருந்தெல்லாம், என்னயப் பாத்து கேள்வி போடுவாரு. நாடாரு தாத்தா கொஞ்சம் குள்ளமா இருந்தாலும், நல்ல செகப்பாவும் இருப்பாரு. இந்தியாவோட முதன் மந்திரியாரு? மலாயாவோட, முதன் மந்திரி யாருன்னு நாடாரு போடுற கேள்வியெல்லாம் எனக்கு பெரிசாவே தெரியாது. செண்றி போர்டு, குவார்டர்ஸ்ல உள்ள ஒரு வீட்டுல தான் தங்கியிருந்தாரு . பள்ளிக்கோடம் விட்டு பசங்களோட வீட்டுக்குப் போகும் போது குவார்ட்டஸ் வழியாத்தான் பண்ணி (பன்றி)க் குழிங்களத் தாண்டித் தாண்டி பண்ணிப் பீங்கள மெதிச்சிடாம பாத்துப் பாத்துப் போயிட்டிருக்கறப்போ, புளிய மரத்துக்குக் கீழ போட்டிருக்கிற கயித்துக் கட்டில் மேல படுத்துக்கிட்டிருப்பாரு நாடாரு தாத்தா. கொஞ்ச நாளக்கி முன்ன விடிகாத்தால தப்பு அடிக்கிற சத்தம் கேட்டுக்கிட்டே இருந்துச்சி. விடிஞ்சி, அப்பா பெரட்டுக்குப் போய்ட்டு வந்து அம்மாகிட்ட சொன்னதுலேர்ந்து தெரிஞ்சது. “செண்றி போர்டு குவார்ட்டர்ஸ்ல, நாடாரு வீட்டு அம்மா ரொம்ப நாளா புத்து நோயிருந்து இராத்திரி தவறிப் போயிட்டாங்களாம், ரெண்டு மணிக்கு எடுத்துருவாங்கலாம். அதனால இன்னிக்கு அந்தி வெட்டுக்கு, நான் பேர் குடுக்காம வந்திட்டேன்னும்,” சொன்னாரு.

ராத்திரியில தப்புச் சத்தம் கேட்டா பயத்துல படுக்கயில ஒன்னுக்குப் போயிடுவேன். பாட்டியும் இதுக்கு என்னென்னவோ வயித்தியமெல்லாம் பாத்தும், ஒன்னுக்கு விட்டுர்ற பழக்கத்த மாத்த முடியாதுன்னு தெரிஞ்சி வயித்தியம் பாக்கறத விட்டுட்டாங்க. ஒன்னுக்கு வுட்டுர்ற நேரம் எதா இருந்தாலும், எழுந்து உக்காந்து, என்னய ரெண்டு மொத்து மொத்தி, படுக்கத் துணியயெல்லாம் மாத்திப் போட்டு படுக்க வெப்பாங்க பன்னண்டு வயசிலயும், தப்பு அடிக்கிற சத்தம் கேட்டா பயத்துல ஒண்ணுக்கு விட்டுர்றது மட்டும் நிக்கல.

நவரத்தினம் ஸ்டோர்ல பத்திரிக, பொத்தகமெல்லாம் எடுத்துக்கிட்டு, தபால் ஆபிசுக்குப் போய், பள்ளிக்கோடத்து லட்டர்ங்க வந்திருந்தா அதயும் எடுத்துக்கிட்டு லெட்டர்ங்கல போஸ் பண்ணிப்புட்டும் வரச் சொல்லுவாரு டோமினிக் சாரு. அப்படி அங்கப் போவும் போது ஒரு தரம் நாடாரு தாத்தாவும்

ஊருக்குப் பணம் அனுப்ப வந்திருந்தாரு. அங்க என்னயப் பாத்துப்புட்டு, அங்க இருந்த சுப்பையா போஸ் மாஸ்டர்கிட்ட ரொம்ப பெருமையா சொல்லி என்னய ரொம்பவும் பாராட்டுனாரு நாடாரு தாத்தா.

நவரத்தினம் ஸ்டோர் வாங்கு மேல உக்கார்ந்திருந்தாலும் நாடாரு தாத்தா, தபாலாபீசு, போலீஸ் ஸ்டேசன், எண்ணெ கடயெல்லாம் தாண்டி 'போய்ச் சோங் கோப்பீ கட' பாலம் வரைக்கும், ரோட்டோரத்து மரங்கள்ளர்ந்து மஞ்ச மஞ்சளா கொட்டிக் கெடக்குர பூவுங்களயெல்லாம் கூட்டி முட்டுங்க போட்டுப் புட்டுதான் நவரத்தினம் ஸ்டோர் வாங்கு மேல ஒக்காருவாரு நாடாரு தாத்தா. நாடாரு தாத்தா மூங்ககுச்சி தொடப்பம்போட்டு, ரெண்டு பக்கத் தெருவயும் கூட்டி முடிக்கிறதுக்கு முன்ன பாத்தா பாக்கிறதுக்கு அவ்ளோ அழகாயிருக்கும். ரெண்டு பக்கமும் பெரிய பெரிய மரங்க வரிசையா இருக்கும். அஞ்சடி கதவுங்க, அல்லூர் கங்குங்க, ரோட்டுல நிப்பாட்டி வெச்சிருக்கிற சைக்கிள், காடிங்க, ரோட்டுல அங்கயும் இங்கயும்னு நடந்துபோர ஜனங்க, அத்தாப்பு கூரைங்கன்னு எங்கப் பாத்தாலும், மஞ்சள் மஞ்சளா பூவுங்க கொட்டிக்கிட்டு, ஒட்டிக்கிட்டு ரொம்ப அழகா அந்தத் தெரு இருக்கும். சொல்லணும்னா, ரெண்டு பக்கமும் இருந்த அத்தாப்புப் பலக கடைங்க பூராவுமே வரிசயா நின்னுக்கிட்டு இருக்குற மரங்களோட நெழல்ல இருக்குற மாதிரியே இருக்கும். முப்பது நாப்பது குட்டிங்கள இழுத்துக்கிட்டுத் தாய் பண்ணிங்க குய்யோ முய்யோன்னு ரோடு பூராவும் பேண்டு அசிங்கம் பண்ணி வெச்சிருந்தாலும், கண்ணுக்கு எட்டுன தூரம் வரைக்கும் தெரியும் அந்த ஊரு, மத்தியானமா மழ பேஞ்சா, இன்னும் ரொம்ப அழகா இருந்து சந்தோசத்தக் கொடுக்கும். ஆல் இந்தியா, செய்தி கேக்குறதுக்கு, ரொம்ப அமைதியா இருக்கிற நாடாரு தாத்தா செய்தி முடிஞ்ச அப்பறந்தான் பாக்கெட்டுக்குள்ள கையவுட்டு வெத்தலப் பைய எடுப்பாரு. வெத்தலய தடவித் தடவி நீவி வுட்டுப்புட்டு, பொகயிலய உள்ளங்கையில வச்சி ஒரு நசுக்கு நசிக்கி, வாயிலப் போட்டுக்கிடுவாரு. செய்தி முடிஞ்சதுக்கு அப்பறம் தான் கைலாசபதி செட்டியாரு கடையத் தெறப்பாரு. பலகைங்கள வெளிய இருக்குற தூணு மேல சாத்தி வச்சிப்புட்டு, அதுக்கப்புறம்தான் உள்ள போயி சாமிய கும்பிட்டுட்டு, வெளிய சட்டத்துல குமுதம், கல்கண்டு, ஆனந்தவிகடன், அம்புலி மாமா, சினிமா பாட்டுப் பொஸ்தகத்தயெல்லாம் மாட்டி முடிச்சதுக்கு அப்புறந்தான் எங்கிட்டே பொக்கு, பத்திரிகைங்க எல்லாத்தயும் ஒரு கட்டுக் கட்டிக் குடுப்பாரு . அதுக்கு அப்புறந்தான் வாங்கு மேல ஒக்காந்திருக்கிற நாடாரு தாத்தா கிட்ட பேச்சயே குடுப்பாரு, கைலாசபதி செட்டியார். அதுவரைக்கும், வெத்தலய மென்னபடியே சரஸ்வதி விலாஸ் போஜன சால ஜீ.இ.சி ரேடியோவிலிருந்து வர்ற "அன்னையும் தந்தையும்தானே", ன்னு பாகவதர் பாட்ட கேட்டுக்கிட்டு இருப்பாரு. இதயெல்லாம் எங்கைக்கு பத்திரிக பொஸ்தகமெல்லாம் கெடக்கிற வரைக்கும் நான் பாத்துக் கிட்டு இருப்பேன் தெனமும்.

செட்டியாரும், நாடாரும் பேசிக்கிட்டு இருக்கும்போதுதான் அதுல வந்து கலந்துக்குவாரு, பக்கத்துக் கடை சின்னச் சாமி பத்தரு. வேட்டிய ஒரு தரம் உருவி சொருவிகிட்டு மூணு பேருங் கூடி ஊரு கதய பேசும் போது கேட்கிறதுக்கு ரொம்ப சந்தோசமா இருக்கும். "தமிழ் நாட்டுல, கொராமத்துக்கெல்லாம் கரண்டும் தண்ணியும் குடுக்கப் போறாங்களாம், பள்ளிக்கோடத்துப் புள்ளங்களுக்கு இலவச உணவும் உடுப்பும் குடுக்கப் போறாங்கன்னு வேற இன்னிக்கு சேதியில சொல்லியிருக்காங்க, செட்டியாரேன்னு" நாடாரு அவுங்க ரெண்டு பேரு கிட்டயும் சொன்னப்ப, "யாரு இதெல்லாம் அந்தப் புண்ணியவான் காமராஜரு மந்திரியா வந்ததுக்கு அப்புறம்தானே நடக்குதுன்னு"னாரு சின்னச்சாமி பத்தரு. அவரு சொன்னது சரிதான்னு நாடாரும் செட்டியாரும் சொன்னதுக்கு அப்புறம் கடையில இருக்கிற பத்தர்வூட்டு பொம்பளைங்கிளக் கூப்புட்டு, பத்தரு மூணு பேருக்குமா சேர்த்துத் தேத் தண்ணி கொண்டுக்கிட்டு வரச் சொல்லுவாரு . பத்தர் வூட்டு பொம்பளங்க விடிஞ்சவொடனயே வாசப் பக்கம் தண்ணி தெளிச்சிவுட்டிருப்பாங்க. யாராச்சும் பேப்பரோ, புஸ்தகமோ வாங்குறதுக்கு வந்தாங்கன்னா, செட்டியார் உள்ள போய்டுவாரு. மீதியிருக்கிற செய்திங்கள நாடாரு தாத்தாவும் சின்னச்சாமி பத்தரும் பேசிக்கிட்டு இருப்பாங்க. இந்த வரிசயில தொங்க கட அல்லூரு ஓரமா இருக்கிற மரக் கடையிலிருந்து கட்டைங்கள அறுக்கிற சத்தமும், மரங்களக் கோடாலியில பொளக்கிற சத்தமும் கேட்டுக்கிட்டு இருக்கும். கட்டைங்கள ரெண்டு பேர் சேந்து ரம்பத்தால அறுக்கிற 'சொய்ங் சொய்ங்' சத்தம் கேக்கறதுக்கு எனக்கு ரொம்ப புடிக்கும். மரக் கடயில வேல பாக்கிற அஞ்சாரு பேரு நடமாடிக்கிட்டு இருக்கிறதப் பத்தியோ சத்தத்தப் பத்தியோ கவலப் படாம, நாலஞ்சிப் பண்ணிங்களும், பத்து இருவது ஆங்குசா, வாத்துங்களும் அல்லூர்ல அதம் பண்ணிக்கிட்டு இருக்குங்க. அதுல இருந்து எழுந்திரிக்கிற அஞ்சாறு பண்ணிங்களும், எதப்பாத்தும் சட்ட பண்ணாம, லோரி, பஸ், காடின்னு எதப்பாத்தும் அலட்டிக்காம ரோட்டுல விருப்பத்துக்குக் குறுக்கயும் நெடுக்கயும் திரியுங்க. மேலல்லாம் அல்லூரு சேரு அப்பிக்கிட்டு, எங்கப்பாத்தாலும், எதப் பாத்தாலும் இலுப்பிட்டு போய்டுங்க. வாங்கு மேல ஒக்காந்துக்கிட்டு எல்லாத்தயும் வேடிக்க பாத்துக்கிட்டு இருப்பாரு நாடாரு.

நாடாருக்கு ரொம்ப வேதனயாவும், வருத்தமாவும் இருந்த விஷயம் நடந்து பன்னெண்டு வருஷம் ஆகியும் அவரால மறக்க முடியாம இருந்தது. செட்டியார்கிட்டயும், பத்தருகிட்டயும் பேசும் போது எப்பவும் இதப்பத்தி நாடாரு சொல்லிக்கிட்டே இருப்பாரு. 47ல, மலாயாவுக்கு வந்த, ஆர்.ஏ.எம்.ஜிம் கானா புட்பால் டீம் காரனுங்க, எங்கயுமே தோக்காம பெனாங்குல மட்டும் ஒரு கோல்ல தோத்துட்டுப் போனதுதான் நாடாரால ஏத்துக்க முடியாத விஷயமாக ஆயிப்போச்சு. நாடாரு, அப்படி ஆந்து போரப்பல்லாம், பத்தர்தான் சொல்லுவாரு, "யோவ் நாடாரே; நீ வேறய்யா.. தாயோளிப் பசங்க லஞ்சத்த வாங்கிப்புட்டு பெனால்டியில தோத்துப் போனானுங்க, நீ வேற அதயே சொல்லிச் சொல்லிப் பொலம்பிக்கிட்டிருக்கிற. வயித்தெரிச்சல கௌப்பாதய்யா" ன்னு பத்தர்தான் சலிப்போட, நாடாருக்குப் பதில் சொல்வாரு. இதே மாதிரி பல விஷயங்களயும் நவரத்தினம் ஸ்டோருக்குப் போறப்ப நான் கேட்டிருக்கேன். ஒரு நாள் காலயில அல்லூர்லர்ந்து எழுந்திரிச்ச தாய் பண்ணி ஒன்னு பத்துப் பதினஞ்சி குட்டிங்களோட பாலத்துக்கு நட்ட நடுவுல நீட்டிப் படுத்துக்கிடுச்சு. மெயின் ரோட்டுமேல பண்ணியும் குட்டிங்களும் படுத்துக்கிட, தாண்டிப்போவ முடியாம ரெண்டு பக்கமும் காடிங்களும், லோரிங்களும் பஸ்சும் எவ்ளோ ஹர்ன் அடிச்சிப் பாத்தும் ஒன்னும் நடக்குல. ரெண்டு பக்கமும் ஜனங்க கூடி நின்னு வேடிக்க பாத்துதே தவிர வழியொன்னும் பொறக்குல. அப்ப தான் நவரத்தினம் ஸ்டோர் வாங்குமேல ஒக்காந்திருந்த நாடாரு ஒரு வேடிக்க பண்ணாரு. கட தெருவுக்கு பின்னாடி, "ஆடாம் எஸ்டேட், பவுண்டிரி பக்கத்துல கொட்டா போட்டு, பத்துப் பதினஞ்சி பண்ணி வளக்குர சீனத்தி தீனி வெக்கக் கூப்புடுறது மாதிரியே "ஓ..லாயோ..ஓ...லாயோ" ன்னு, நாடாரும் கூப்புட்டுப் பாத்தாரு. கஞ்சிக்குக் கூப்புடற கொரலு கேட்டவொடனயே, ஒரு தரம் தலயத் தூக்கிப் பாத்த தாய் பண்ணி குட்டிங்கள ஒரு நோட்டம்வுட்டு, எழுந்திரிச்சி, உர்ரு..உர்ரு..ன்னு உருமிக்கிட்டே, மடி தளுதளுக்க, அசஞ்சி அசஞ்சி கொட்டா பக்கம் நடக்க ஆரம்பிச்சி, போக்குவரத்துக்கு ரோடு சகஜமாச்சி.

ஒரு தடவ அப்படித்தான், நவரத்தினம் ஸடோர்ல கல்யாணப் பரிசு பாட்டுப் பொஸ்தகம் வாங்கிரதப் பாத்துப்புட்டு, நாடாரு கேட்டாரு, "பள்ளிக்கோடத்துல படிக்குறப் புள்ளக்கி சினிமாப் பாட்டு பொஸ்தவம் ஏம்ல ?" "எனக்கு இல்ல தாத்தா பக்கத்து வூட்டு வள்ளியம்மா அக்காதான் காசு வுடுத்து வுட்டாங்க. அவங்களுக்காவதான் வாங்கிக் கிட்டுப் போறேன்னு," சொல்லி சமாளிச்சிட்டேன். காலயிலன்னா நவரத்தினம் ஸ்டோர் வாங்கு மேல ஒக்காந்திருக்கிற நாடாரு சாயங்காலமானா, அப்துல் ரஹ்மான் வங்குசாக் கட ஆளுங்களோட பேசிக்கிட்டு நிக்கிறத, வீட்டுக்குத் தேவைப்படற ஒன்னு ரெண்டு சாமான்க வாங்கப் போறப்ப அப்துல் ரஹ்மான் வாங்குசாக் கடயில அவர நான் பாத்திருக்கேன். அப்பவெல்லாம் முழுக்கை சட்டையும் நீட்டுக்கால் சிலுவாரும் கால்ல இந்தியா செருப்பும் கையில டிட்டோனி கடிகாரமும் அக்குள்ள கொடையும் வச்சிக்கிட்டு, ரொம்ப ஜோரா வங்குசாக்கட ஆளுங்களோட கதயடிச்சிச்கிட்டு இருப்பாரு நாடாரு. வேற சில நேரங்கள்ள பாத்தா, மூர்த்தி முடி வெட்டும் நிலையத்தில, கட மொதலாளி மூர்த்தியோட பேசிக்கிட்டு இருப்பாரு. அப்பா, என்னயும் எந்தம்பிங்களயும் அந்தக் கடைக்குத்தான் முடி வெட்ட கூட்டிக்கிட்டுப் போவாரு.

திராவிடக் கட்சி, காங்கிரஸ், அண்ணாதுரை, ஈ.வெ.ரா, நேரு, காமராஜர், சுபாஸ் சந்திரபோஸ், பாரதியார், கல்கி, காண்டேகர், அகிலன், மு.வ , கண்ணதாசனும், ரஸ்யா, குருசேவ், அமெரிக்கா, ஐசநோவர், இங்கிலாந்து மாக்மில்லன், ராக்கெட், குட்டிச் சந்திரன், சம்பந்தன், பி.பி.நாராயணன், டி.ஆர்.சீனிவாசகம், டேவிட்மார்ஷல், கோ.சாரங்கபாணி, தமிழ் முரசு, தமிழ் நேசன், சங்கமணின்னு, எத எதப்பத்தியெல்லாமோ, பேசிக்குவாங்க. கட முதலாளி மூர்த்திய நானும் எந்தம்பிகளும் "மாமா" ன்னுதான் கூப்புடணும்னு அப்பா ரொம்ப நாளக்கி முன்னயே சொல்லிக்குடுத்திருந்தாரு. மூர்த்தி மாமா, முடிவெட்டும் நிலயத்துல எப்பவும் பன்னீர் வாசனயும், புட்டா மாவு வாசனயும் அடிச்சிச்கிட்டே இருக்கும். அதுமட்டுமில்லாம, அவர் கடயில, இந்தியன் மூவி நியூஸ், திரை நிலா, மனோகரன், பேசும் படம்னு விதம் விதமா பத்திரிக பொஸ்தகமெல்லாம் இருக்கும். அதுங்கள்ள, சிவாஜி, எம்.ஜியார், ஜெமினி, எஸ்.எஸ்.ஆர், பத்மினி, சாவித்திரி, அஞ்சலிதேவி, படங்க இருக்கும். அதுங்களப் பாக்குரதுக்கும், படிக்கிறதுக்கும் எனக்கு ரொம்ப புடிக்கும். அங்க இருக்கிற பொஸ்தகத்த நான் எடுத்துப் படிக்கிறத நாடாரு தாத்தா பாத்துப்புட்டார்னா, கடயில ஒக்காந்திருக்கிறவங்க கிட்டயும், மூர்த்தி மாமா கிட்டயும், என்னயப் பத்தி பாராட்டி கெட்டிக்காரன்னு சொல்லுவாரு. அங்க உள்ளவங்க ரொம்ப பேரு எங்க தோட்டத்து ஆளுங்களா இருந்தாலும், நாடாரு தாத்தா இப்படிச் சொல்லும் போது எனக்கு ரொம்ப வெக்கமா போயிடும்.

இந்தியாவுக்கும், சீனாவுக்கும் 'லடாக்குல' எல்ல சண்ட வந்ததுல, நாடாரு தாத்தாவுக்கு ரொம்பவே மனசு சங்கடமாயிடிச்சி. 'லடாக்குல' நொழஞ்ச சீனப்பய முதுகுல குத்திப்புட்டான் செட்டியாரேன்னு கொஞ்ச நாளா ஆரமிச்சிட்டாரு. இப்பல்லாம் காலயிலயே சரஸ்வதி விலாஸ் போஜன சாலக்கே போய் உக்காந்து 'ஆல் இந்தியா' செய்தி கேட்க ஆரமிச்சிட்டாரு. நேரு, மாமா செத்துப்

போனப்போ, எங்க பள்ளிக்கோடத்து மைதானத்துல இரங்கல் கூட்டம் வச்சிருந்தாங்க. ஐந்தாம், ஆறாம் வகுப்பு மாணவங்க எல்லாரும், நேரு மாமா இரங்கல் கூட்டத்துக்கு, கண்டிப்பா வந்து கலந்துக்கனும்னு டோமினிக் சாரு உத்தரவு போட்டுட்டாரு. எங்க தோட்டத்து, சுப்பிரமணியம் கிராணியாரு, கைலாசபதி செட்டியாரு, சண்முகம் செட்டியாரு, சின்னச் சாமி பத்தரு, ரவி மேனன் கிராணியாரு, மூர்த்தி மாமா, நாடாரு தாத்தான்னு எல்லாருமே சட்டயில கருப்புத் துணி குத்திக்கிட்டு வந்து கலந்துகிட்டாங்க. அஞ்சாம், ஆறாம் வகுப்பு பசங்க ஒருத்தர் விடாம, நாடாரு தாத்தாதான் சட்ட பாக்கெட்டுக்கு மேல கருப்புத்துணி குத்திவுட்டாரு. கூட்டத்துக்கு வந்திருந்த முக்கிய ஆளுங்க எல்லாம் நேரு மாமாவப் பத்தி ரொம்பப் புகழ்ந்து பேசுனாங்க. எங்க டோமினிக் சார் பேசும்போது கண்கலங்குனதப் பாத்து எங்களுக்கும் அழுக வந்தது. இராஜகோபால், அண்ணன்தான் மேடயில ஏறி 'மைக்குல' மலர்களைப் போல் நேரு, உறங்குகிறார்னு பாடுனாரு. பாட்டப் பாடும்போது அந்த அண்ணன் தேம்பித் தேம்பி அழுதாரு. இரங்கல் கூட்டத்துக்கு வந்திருந்த எல்லாருமே அழுதாங்க.நேரு மாமாவோட படத்த காடியில வச்சி, ஊர்வலம் போகும்போது, இந்தியாவோட கொடிய கொஞ்ச பேர் புடிச்சிக்கிட்டு வந்தாங்க. அதுக்கு அப்புறம் எங்களயெல்லாம் பஸ்ல ஏத்திக்கிட்டு சித்தியவான்ல இருக்குற காந்தி மண்டபத்துக்குக் கூட்டிப் போனாங்க. அங்கயும், நேரு மாமாவுக்கு அஞ்சலி செய்யறதுக்கு ஏராளமானவுங்க கூடியிருந்தாங்க. புல் திடல்ல நடந்த கூட்டத்துல, பள்ளிக்கோடத்து பசங்களயெல்லாம் முன்னால வரிசயா ஒக்காரவச்சாங்க. டாக்டர் மேனன், கிருஷ்ணன் வாத்தியாரெல்லாம் பேசி முடிச்சப்புறம், இராஜகோபால் அண்ணன பாடச் சொன்னாங்க. இங்கப் பாடும் போதும் அவரால அழுகய அடக்க முடியல. மேடயிலிருந்து அந்த அண்ணன் இறங்கி வரும்போது, நாடார் தாத்தாதான் அவர ரொம்ப சமாதானப் படுத்துனாரு. அந்த அன்னக்கி எல்லார் மனசுலயும் இராஜகோபால் அண்ணன் பாடுன பாட்டுதான் எடம் புடிச்சிருக்கும். ஒரு நாள் காலயில நவரத்தினம் ஸ்டோருக்கு நான் போயிருந்தப்ப, நாடாரு தாத்தாவக் காணல. கைலாசபதி செட்டியார், சின்னச்சாமி பத்தரு, எதிர்வரிசயில டெய்லரிங் கட வச்சிருந்த, வெள்ளச்சாமி டைலர் மூணு பேருமா பேசிக்கிட்டு இருந்தாங்க. அவுங்க பேச்சில நாடாரு தாத்தா பேரு அடிபட்டவொடனே 'பேப்பர்' பாக்கிற சாக்கில, என்ன பேசிக்கிறாங்கன்னு கவனிச்சி கேட்டேன். நாடாரு தாத்தா, திருநெல்வெளிகாரர்னும், அவரு பொஞ்சாதி இருக்கும் போதே, ரெண்டு மகளுங்களயும் ஊருக்கு கூட்டிப் போய், ஒரு மகள அக்கா மகனுக்கும், ஒரு மகள தங்கச்சி மகனுக்கும் கட்டிவெச்சிட்டு வந்துட்டாருன்னும், ஊருல நாடாருக்கு வயக்காடும் ரொம்ப வசதியான வூடும் இருக்குன்னும் அவுங்க மூணு பேரும் பேசுனதுலர்ந்து தெரிய வந்துச்சி. நாடாருக்கு, இன்னும் நாலஞ்சி மாசம் தான் வேல செய்ய முடியும்னும் அம்பத்தஞ்சி வயசுக்கு மேல கவர்மெண்டுல வேல செய்ய முடியாதுங்கிறதுனால நாடாரு ஊருக்குப் பொறப்பட்டு போய்டுவாருன்னும் அவங்க பேசிக்கிட்டாங்க. கூட்டு கட்டியும், வட்டிக்கு விட்டும் நாடாரு ரொம்பவே பணம் சேத்துவச்சிருக்காருன்னும் அவங்க மூணு பேரும் பேசிக்கிட்டாங்க. நாடாரு தாத்தா ஊருக்குப் போகப் போறார்னு கேள்விப்பட்ட வொடனே எனக்குப் 'பக்கு'ன்னு ஆயிடிச்சி. என்னயப் பாக்கிறப்பவெல்லாம் கணக்குப்போட்டு வெடய சொன்னதுக்குக் காசுகுடுக்கிற நாடாரு தாத்தா, ஊருக்குப் போய்பிட்டு திரும்பி வரமாட்டாராமே, அத நெனச்சா மனசுக்கு ரொம்ப கஷ்டமாயிக்கிட்ட இருந்துச்சி. என்னயப் பாக்கிரப்பவெல்லாம் கணக்கு போடர நாடாரு தாத்தா, கஷ்டமான கணக்க போட்டதேயில்ல. அவரு காசுகொடுக்கிறதுக்காவேதான் எனக்குக் கணக்குப் போடுராறோன்னு ஒரு சந்தேகம் இருந்துக்கிட்டே இருந்திச்சி. சீனாக்காரன், இந்தியாவோட சண்ட போட்டப்ப "இந்தியா ஏமாந்துப்புடுச்சே; இந்தியா ஏமாந்து புடுச்சே, செட்டியாரே",ன்னும் நேரு மாமா செத்ததுக்கு அப்பறம் "சீனப்பய, நேருவ முதுகுல குத்திப்புட்டான், செட்டியாரே"ன்னும், அவரு ஊருக்குப் போறவரைக்கும் சொல்லிக்கிட்டிருந்த, வார்த்தைங்க. ஆறாம் வகுப்புப் பரிச்சை நெருங்கிட்டதால, அது ரொம்ப முக்கியம்னு சொல்லி, இப்பவெல்லாம் டோமினிக் சாரு, என்னய பத்திரிகை எடுக்கிறதுக்கு, நவரத்தினம் ஸ்டோருக்கும், லட்டர்ஸ்ங்க எடுக்கிறதுக்கு போஸ்ட் ஆபிசுக்கும் அனுப்பிறதில்ல. கடத்தெருவ இப்பவெல்லாம் சுத்திவர என்னால முடியில.

வகுப்புல உக்காந்து எந்நேரமும் பாடம் படிச்சிக்கிட்டு இருந்தேன். நாடாரு ஊருக்குப் போன விஷயம் எனக்குத் தெரியாம போயிடிச்சி. வீடு வீடா போய், கடை கடயா போய் நாடாரு பயணம் சொல்லிட்டுப் போனதாவும், போகும் போது "இனிமே நான் திரும்பி மலேயாவுக்கு வரமாட்டேன்னு சொன்னதாவும், அப்ப நாடாரு ஒவ்வொரு வீட்டுக்காரவுங்க கிட்ட பயணம் சொல்லும் போதும் அவரு ரொம்பவே அழுததாகவும் பேசிக்கிட்டாங்க. மத்தவங்க இதச் சொல்லி கேட்கும் போது எனக்கு அழுக அழுகையா வந்துச்சி. என்னயப் பாத்தவொடனே கணக்கு போடறதும் கணக்க கரெக்டா சொன்னதுக்குக் காசு கொடுத்ததும், எங்க அப்பா பேரச் சொல்லி அவரூட்டுப்புள்ளன்னு மற்றவங்ககிட்ட சொல்லிச் சொல்லிப் பாராட்டுனதும் அடிக்கடி ஞாபகத்துக்கு வந்து வேதனய ஏற்படுத்திக்கிட்டே

இருந்துச்சி. அப்பல்லாம், இந்தியாவுக்குக் கப்பல்ல போனா ஒரு மாசம் புடிக்கும்னும், ஏழு கடல் தாண்டிதான், ஊருக்குப் போக முடியும்னும் சொல்லிக்குவாங்க. எங்க அம்மாவோட அப்பா பெருமாள்கான் தாத்தாகூட ஒரு தரம் ஊருக்குப் போயிட்டு வரும் போது, மாம்பழக் கூடையும், பலகாரமும் வச்சி வீட்டுல குடுத்துட்டுப் போனாரு. பெருமாள்கான் தாத்தா கூட ஊருக்குப் போறதா வந்து வீட்டுல பயணம் சொன்னப்போ, அம்மாவும் அப்பாவும் கூட அழுதத நாம் பாத்திருக்கேன். நாடாரு, ஊருக்குப் போறேன்னு வீடு வீடா போய் சொன்னப்ப மத்தவங்களும் நாடாரும், அழுததும் கேள்விப்பட்டு, எங்க தாத்தா ஊருக்குப் போறேன்னு பயணம் சொல்லிட்டு அழுததும் கூட சேர்ந்து வீட்டுல இருந்தவங்க அழுததும், இப்ப ஞாபகத்துக்கு வந்துடுச்சி. இன்னும் ஒரு வாரத்துல ஆறாம் வகுப்பு நுண்ணறிவு பரிச்ச முடிவு வந்திரும்னு எங்கப் பள்ளிக்கூடத்து இங்கிலிஸ் பாடத்துக்கு வர்ற சுந்தரேச சாரும், தேசியமொழி பாடத்துக்கு வர்ர தாஜுடின் சாரும் பேசிக்கிட்டாங்க. அப்பதான் டவுனுக்கு ஏதோ வேலயா போய்ட்டு வந்த டோமினிக் சாரு, மூன்றாம் நான்காம் வகுப்பு ஆசிரியர் திரு. ஆரோக்கிய சாமி சார் கிட்ட ஏதோ கோபமா திட்டிப்பேசிக்கிட்டு இருந்ததப் பாத்தேன். பெரிய சார் பேசுப் போது எப்பவும் உரக்கத்தான் பேசுவாரு. அதுவும், அன்னக்கி கோபத்துல பேசுனது எல்லாருக்கும் நல்லாவே கேட்டுது. பள்ளிக்கோடத்துக்கு வெளியே நான்காம் வகுப்பு மாணவர்களுக்கு பாட்டு நேரம். மாங்கா மரத்துக்கு கீழ "ஈக்கான் கெலாமா மாய் லோய் லோய், ஈக்கான் கே கே மாய் லாய் லாய்", ன்னு மலாய் பாட்ட பொளந்து கட்டிக்கிட்டு இருக்கிறாங்க. பெரிய சார் பேச்சில, நாடாரு தாத்தா பேரும் வங்குசாக் கட ஆளுங்க பேரும், எஸ் எஸ் ரஜூலா கப்ப பேரும் ரொம்ப அடிபட்டிச்சி. எனக்கா ஆவல் தாங்க முடியல. என்னப் பேசிக்கிறாக்க ரெண்டு பேரும்னு கேக்கிறதுக்காவ, ஸ்டோர்ரூம்லர்ந்து சாக் பீஸ் எடுக்கிறது கணக்கா போய் நின்னு கேட்டதுல எம் ஒடம்பே ஆடிடுச்சி. நம்ப நாடாருத் தாத்தா கூட ஊருக்குப் போறதா சொல்லிக் கூட்டிக்கிட்டுப் போன ஆளுங்க, நாடாரு தாத்தாவ ஏமாத்தி பணம், துணி மணி, பொருளுங்க எல்லாத்தயும், சுருட்டிகினு பினாங்கு கரயிலயே தாத்தாவ உட்டுட்டுப் போயிட்டாங்கன்னு தெரிஞ்சது. மொதல்ல கூட போனவங்க எல்லாரும் நாடாருவும் சேர்ந்தே கப்பல்ல எல்லா சாமானுங்களயும் வச்சதாயும் அதுக்கு அப்புறம் டவுன்ல போய் ஏதோ சாமானுங்க வாங்கணும்னு சொல்லி நாடாரு தாத்தாவ வெளியே கூட்டிக்கிட்டு போய் ரொம்ப தூரத்துல வுட்டுப்புட்டுக் கப்ப பொறப்படர நேரம் பாத்து போய் ஏறிட்டாங்கன்னும் அதுக்கு அப்பறம் நாடாரு யாரையோ புடிச்சி பொறப்பட்டு வந்துப் பாத்தப்போ கப்ப கண்ணுலயே படலன்னும், அதுக்கு அப்பறம், நாடாரு தாத்தா பயித்தியம் புடிச்ச மாதிரி அங்கயும் இங்கயும் அலஞ்சு அழுது நெஞ்சில அறைஞ்சிகிட்டு அழுது பொரண்டு 'எல்லாம் போயிடிச்சே, எல்லாம் போயிடிச்சே, எம் பொம்பளப் புள்ளங்களுக்கு சேத்து வச்சிருந்தேனே, அதுங்களுக்கு இப்ப என்னா பதில நான் சொல்லுவேன் இப்படி ஏமாத்திப்புட்டானுங்களே பாவிங்க'ன்னு சொல்லி அழுதாருன்னு பக்கத்துத் தோட்டத்துல இருந்து பினாங்குக்குப் போய்ட்டு வந்தவங்க யாரோ சொன்னதக் கேள்விப் பட்டுத்தான், பெரிய சாரு கோபமா பேசுனார்னும் தெரிஞ்சது. பக்கத்துத் தோட்டத்து ஆளுங்க நாடார எவ்ளோ சமாதானப் படுத்தியும் முடியாமப் போயிடிச்சுன்னும் அவருக்குப் பயித்தியம் புடிச்ச கணக்கா சட்டைய எல்லாம் கிழிச்சிக்கிட்டுத் தெருவுல அலையறார்னும் பாக்கவே தாக்க முடியலன்னும் சொன்னவுங்க ஹார்பருக்குப் போயி கப்பபோன தெசயவே பாத்து அழுகுகிறார்ன்னும் சொல்லியிருக்காங்க. இப்ப நாடாரு தாத்தாவப் பத்துன எல்லா ஞாபகமும் எனக்கு வர ஆரமிச்சிருச்சி. நாடாரு நெனச்சி அழாம இருக்க என்னால முடியலே; எனக்கு எதுவும் வெளங்கல. நாடாரு தாத்தா ரொம்ப ரொம்ப நல்லவரு அவருக்கா இப்படி ஆவனும். தெனம் நாடாரு தாத்தா ஞாபகம் வந்துபோயிக்கிட்டே இருக்குது.

ஆறாம் வகுப்பு நுண்ணறிவு பரிச்ச முடிவு வெளியான அன்னக்கி எங்க பள்ளிக்கோடமே ஆடிப் போயிடிச்சி. ஏன்னா, பரிச்ச எழுதுன எல்லா பதினாலு பேருமே பெயில் பண்ணிப்புட்டு தலயக் கீழப் போட்டுக்கிட்டு உக்காந்திருந்தோம். நான் பாஸ் பண்ணிடுவேன்னு அடிச்சிப் பேசிக்கிட்டு இருந்த டோமினிக் சாருக்கு ரொம்ப ஏமாத்தமா போயிடிச்சி. அவரப் பாத்தா நான் அழுதிடுவேனோன்னு பயமா இருந்திச்சி. நல்ல வேள நாடாரு தாத்தா இங்க இல்ல. இருந்திருந்தார்ன்னா பரிச்சயில பெயிலானதுக்காவ, என்னய ரொம்பவே திட்டியிருப்பார்.

- -கோ.முனியாண்டி